# கோவை அருகே சர்வதேச கருத்தரங்கு!

**கோவை,ஜன.17**

அசோசியேஷன் ஆப் கன்சல்டிங் சிவில் இன்ஜினீயர்ஸ் கோவை மையம், இந்தியன் கான்கிரீட் இன்ஸ்டிட்யூட் ஆகிய அமைப்புகளின் சார்பில் சர்வதேச மாநாடு மற்றும் கருத்தரங்கம் கோவை அம்ரிதா விஷ்வ வித்யா பீடத்தில் கடந்த 2 நாட்கள் நடைபெற்றது.

இதில் பொறியாளர்கள், கூட்டமைப்பு பணி ஆலோசகர்கள், கட்டிட வடிவமைப்பாளர்கள், அரசு துறைகளின் நிர்வாகிகள், ப்ரீகேஸ்ட் கான்கிரீட் தயாரிப்பாளர்கள் சிமெண்ட் ஆட்மிக்சர் மற்றும் ரெடிமிக்ஸ்டு கான்கிரீட் தயாரிப்பாளர்கள் கல்வித்துறையினர் என பல்வேறு பிரிவுகளை சேர்ந்த 200–க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

இதில் பொறியாளர் இன்கிசோய், பேராசிரியர் கோபாலரத்தினம், கபீர்தாஸ், சுகான்தாஸ், பைரோஸ் உள்ளிட்டவர்கள் பலர் பேசினர்.